# இந்தியாவும் சுற்றுப்புற உறவுகளும்

உலகத்தில் முதலாவது மக்கட்பெருக்கம் கொண்ட நாடான இந்தியா எண்ணற்ற தொல்லைகளுடன் உழன்று உறுமிக்கொண்டிருக்கிறது. இந்த பூமிப் பகுதியும் அதன் மக்களும் உலகத்தில் வேறு எந்த நாட்டினருக்கும் இல்லாத அளவு சிக்கல்களில் உள்ளனர் என்பதை பல இந்தியர்கள் அறிந்ததாக அறிய முடியவில்லை. எனவே, அச்சிக்கல்கள் எவை எவையெவைன இப்போது பார்ப்போம்.

முதலாவதாக இந்நாட்டின் சுற்றுப்புற அன்டைத்தொகுதிகளைப் பார்க்கையில் எந்நாடும் இந்நாட்டிற்கு உண்மையான, முழுமையான நட்பு நாடாக இருப்பதாக தெரிவதில்லை. பலவும் பொய் நட்பு எனவே தோன்றுகிறது. தெற்கேயுள்ள இலங்கையும் அதனுடனான பிரச்சினைகளும் இந்திய மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்பிரச்சினையில் இந்தியா நான்குவிதமாக நடந்துகொண்டு தவறைசெய்து வந்திருக்கிறது. ஒன்று , இலங்கை அரசுக்கு கூடுதலாக ஆதரவு காட்டுவது, இன்னொரு சமயம் விடுதலைப்புலிகளுக்கு கூடுதல் ஆதரவு தருவது, மூன்றாவதாக இருவருக்கும் சமமான ஆதரவுடன் கூடிய ஒருவகையான நடுநிலையை பின்பற்றுவது. இறுதியாக எதையும் கண்டுகொள்ளாமல் இருந்துவருவதாகும்.

ஈழத்தமிழர்கள் பிரச்சினையால் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் எப்போதும் ஒரு நிழல் பகை உண்டு. அதிர்ஷ்ட வசமாக ஒரு வேலை ஈழப்பிரச்சினை அமைதியாக தீர்ந்து காணப்பட்டு, ஒரு பத்தாண்டுகாலம் அந்நாட்டுமக்கள் சுமூகமாக வாழ்ந்தபிறகுதான் அந்நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய சிங்களவர்கள் இந்தியாவை உள்மனதுக்குள் விரும்ப ஓரளவிற்கு சாத்தியம் இருக்கும்.

அடுத்து வடகிழக்கு நாடுகளான பங்களாதேசம், பர்மா போன்ற நாடுகளாளும் இந்தியாவிற்கு இடஞ்சலே. இன்றைய பங்களாதேஷ் என்கிற பழைய கிழக்குப் பாகிஸ்தான் , பாகிஸ்தான் வசம் இருந்தபோது அந்நாட்டின் விமானங்கள் இந்திய எல்லைக்குப் பறந்து அத்துமீரல் செய்ததை இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுருத்தலாக இருந்ததை சமாளிக்கமுடியாமல் இந்தியா தினறியது. இவ்வாறான சூழ்நிலையில் கிழக்கு பாகிஸ்தான் மிகுந்த தனிநாடு கோரிக்கையாலும் , சாதுர்யமாக பங்களாதேஷ் தனி நாடாக இருப்பின் இந்தியாவின் சுயநலத்தை கருத்தில்கொண்டு உதவி செய்ய வேண்டும்.

ஆனால் இன்று பங்களாதேஷ் நமக்கு உண்மையான நண்பன் இல்லை. இந்திய பாகிஸ்தான் எல்லையைப்போன்று, பங்களாதேஷ் இல்லையெனினும் எல்லைப் பிரச்சினைகள் மற்றும் இரு நாட்டு எல்லைப்பாதுகாப்பு படையினருக்குள் அவ்வப்போது துப்பாக்கிச் சூடு சண்டைகள், மரணங்கள் ஆகியவை அன்றாட அலுவல்களாகிப்போனது. எல்லைகள் வழியாக கடத்தல்கள், மக்கள் ஊடுருவல்கள், தீவிரவாதிகளின் சதிகள் என தினசரி நிகழ்ச்சிகளாயின.

பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளைப்பற்றி அநேகமாக, அநேகமான இந்தியர்களுக்கு நன்கு தெரியும். தீரவேத் தீராத நிலப்பிரச்சினைகள் வெள்ளை அளவுகள், எந்நாளும் இருந்துகொண்டிருக்கும். ஜார்ஜ்பெர்ணான்டஸ் கூறியதுபோல் பாகிஸ்தானைக்காட்டிலும் சீனாதான் என்றைக்குமே இந்தியாவின் முதலேறிய நாடு என்பது பல காரணிகளால் உறுதிப்படுகிறது. இதற்கு பல காரணங்களை சொல்ல இயலும்.

இரண்டும் ஆசியாவில் பெரிய மக்கட்தொகை கொண்ட நாடு என்பதும் அத்துடன் போட்டிப்போட்டுக்கொண்டு முன்னேறிக்கொண்டிருப்பதுமாகும். உண்மையில் இன்னும் சில ஆண்டுகளில் சீனா என்ற நாடுதான் உலகின் மிகப்பெரிய வல்லரசாகி அமெரிக்கா போன்ற நாடுகளை அடிபணியவைக்க காத்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறு நிகழவிருக்கும் அதன் வளர்ச்சிகளுக்கு பல அனுகூலங்கள் உள்ளன. இந்தியாவைவிட சுமார் இரண்டரை மடங்கு அதிகம் உள்ள அதன் நிலப்பரப்பு, அபரிமிதமான கணிமவளம், கடுமையாக உழைக்கும் இயற்கையிலேயே சுறுசுறுப்புள்ள மஞ்சள்நிற மக்கள், பெட்ரோலிய பொருட்களை அதிகம் உபயோகிக்காத பொது மகா ஜனம், எதுவும் உணவாகும் உணவுப்பழக்கம், எளிமையான வாழ்வுமுறை, தேசப்பற்று, ஒரே மொழி - ஒரே நாடு, நாட்டுமுன்னேற்றத்தில் வெறிகொண்ட வலிமையான தலைமை, எதிர்கட்சியில்லா ஆட்சி, பெரு மக்கள் கூட்டம் என எல்லாம் அந்நாடு பின்னாளில் உலகை ஆட்டிப்படைக்கப்போகிறது என்பதை கட்டியம் கூறுகிறது.

அவர்களுக்கு இப்பகுதியில் சக்தி சவாலாக இருப்பதாகத் தெரிவது இந்தியா மட்டுமே. ஏற்கனவே இவர்களுக்கிடையில் இருக்கும் பகை உலகறிந்தது. இப்போது இந்தியாவை எப்படியும் பின்னடையச் செய்யவேண்டுமென அவர்கள் நிச்சயம் முயற்சிப்பார்கள். அதற்கு அவர்களது கருவியாக இருக்க பாகிஸ்தான் தவம் கிடக்கிறது. சீனாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலுள்ள அன்னியோன்ய நட்பு அதற்கு பயன்பட்டு வருகிறது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள நாள்பட்ட சண்டை, காஷ்மீர் சிக்கள் போன்றவை உலகில் உள்ள சிக்கல்களின் முதலாவதாவது. அமெரிக்கா முதற்கொண்டு ஐரோப்பிய நாடுகள் வரை பகிரங்கமாகச் சொல்வதுபோல் உலகில் மிக ஆபத்தானப்பகுதி இந்தியாவின் தலையில் தலைப்பாரமாக இருக்கும் இந்த காஷ்மீரமே.

இந்திய பாகிஸ்தான் பிரச்சினை எப்போது தீரப்போகிறதோ தெரியவில்லை. தீர்வதும் சிரமமே. அவ்வப்போது பெரும் அதிகாரிகள் முதல் தலைமை ஆட்சியாளர்களை வரை அங்கேபோவதும், இங்கேவருவதும், ஏதேதோபேசியும், கைகுலுக்கள்கள் செய்வதும் நடந்துகொண்டு வருகின்றன. ஆனால், தீர்விற்கான ஒரு சிறு ஒளி கூடத்தெரியவில்லை. பெயருக்காக சில பரிமாற்றங்கள் நிகழ்கின்றன. ஜான் ஏறினால் முழம் சறுக்குகிறது. அந்தந்த தகுந்த நேரங்களில் சீனாவும், அமெரிக்காவும் பல சலுகைகள், உதவிகள், இராணுவத் தளவாடங்கள் போன்றவற்றை ஏராளமாக பாகிஸ்தானுக்கு வழங்கி இதற்கு ஆய்ப்பு வைப்பார்கள்.

இம்மாதிரி போய்கொண்டிருந்தால் காலகாலத்திற்கு இப்படியேதான் நடந்துகொண்டிருக்கும். ஒருநாளும் துன்பம் தீராது. இருநாடுகளும் போட்டி போட்டுக்கொண்டு கோடான கோடி செல்வங்களை இராணுவசெலவுக்களுக்காக இழந்து பொருளாதார முன்னேற்றத்தில் முன்னேறிப்போகிறார்கள். எப்படியாவது இக்காஷ்மீர் பிரச்சினை ஓய்ந்துவிட்டால் பின்னர் இந்தியாவும் உலகின் ஒரு ராஜாதான்.

வேறு வழிகளில் தீர்வு கிட்டாவிடில் இதுதான் இறுதிவழியாக இருக்கலாம். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை பாகிஸ்தான் பகுதியாக ஏற்றுக்கொண்டு, இந்தியாவில் உள்ள பிரச்சினைக்குரிய காஷ்மீரப்பகுதியிலிருந்து ஓடி வந்தவர்கள், விரட்டப்பட்டவர்கள் , வாழும் மக்களின் விருப்பத்தை தெரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இந்தியாவை விரும்புகிறவர்கள், பாகிஸ்தானை விரும்புகிறவர்கள். தனி நாடடுகளை விரும்புகிறவர்கள். என மூன்று பிரிவுகள் கொடுத்து ஓட்டெடுப்பு நடத்தி கருத்தறிந்து செயல்படலாம் . இதை இந்தியா பாகிஸ்தான் காஷ்மீர் மக்கள் மூவரும் சேர்ந்து ஐ.நா.சபையின் ஒத்துழைப்புடன் செய்வது சிறப்பு.

இங்கு தீர்வு ஏற்பட்டால் சில முதலை, கரடி நாடுகள் பகையை நிலைப்படுத்தி ஊக்குவித்து ஆயுதங்கள் விற்று வருவது நின்றுபோகும். நம்முடைய வளமை கிடுகிடுவென உயரும். அநாவாசியச் செலவினங்கள் மனிதச் சாவுகள் இல்லாமல் போகும். அமைதி, நிம்மதி, கௌரவம் உண்டாகும்.

இந்த காஷ்மீரினால் இந்தியவிற்கு உலக அரங்கில் மரியாதைக்குறைவே ஒழிய இதில் எந்த கௌரவமும் தரப்படவில்லை. இந்தியாவைப்பற்றி இதனால் தவறான கருத்து நிலவுகிறது என்தே நிதர்சனம். காஷ்மீர் பகுதியை உலகத்தில் பல நாடுகள் உலக தேசப்படங்களில் தனி நாடாகவே பிரித்து குறித்திருக்கிறார்கள். காஷ்மீரும், இந்தியாவும் மற்றைய மாநிலங்களைப்போன்றது இல்லை. காஷ்மீரர் அல்லாத வேறு எந்த இந்தியர்களும் அங்கு ஒருதுளி இடம் வாங்கும் உரிமையில் இல்லை. அவர்களுக்கென தனி நாடு கொடி, தேசிய கீதம், இந்திய பொது அரசியலமைப்பில் அடங்காத சட்டங்கள் என பல சலுகைகள் உண்டு.

சுதந்திர போராட்ட காலத்து பழைய வரலாறுகளை புரட்டிப்பார்த்தால் காஷ்மீர் இந்தியாவைவிட பாகிஸ்தான் பகுதியுடனேயே நெருக்கமாக இருந்திருக்கிறது. அப்போதைய பாகிஸ்தான் தலைவர்கள் நடந்துகொண்ட விதம் பிடிக்காமல் போகவே காஷ்மீர் அரசர், ஹரிசிங் தன் சுயவிருப்பத்தின் காரணமாக இந்தியாவில் பாதுகாப்பின்றி வந்தார். பின்னர் மெல்ல மெல் காஷ்மீர் இந்திய பகுதியாக மாறும் நிலை ஏற்பட்டது. இதனால் பாகிஷ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் சில போர்கள் நடந்தேறின. இதற்கு சீனா மற்றும் அமெரிக்காவின் பங்கு மிக முக்கியமானது. சீனா இந்தியா போருக்கே மறைமுகமாக காஷ்மீர் ஒரு காரணமாக இருந்ததை யாரும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. காஷ்மீரத்தை இந்தியா சேர்த்துக்கொண்டதையும் இந்தியாவின் நிலப்பரப்பு கூடுவதையும் சீனா விரும்பவில்லை.

புத்த மதத்தை தழுவும் சீன தீபெத் நாடுகளின் சிக்கல்களிலும் இந்தியா வலுவில் மாட்டிக்கொண்டது. சீனா தீபெத் பகுதியை ஆக்கிரமித்தபோது அதன் மதத் தலைவர் தலாய்லாம இந்தியாவின் தஞ்சம்புகுந்தார். அவருக்கு இங்கு பெரிய மரியாதையும் ராஜ்ய தலைவர் அந்தஸ்தும் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருவதால் சீன இந்தியா உறவில் எப்போதும் ஒருவித நிழல் பகை இருந்துவருகிறது. தீபெத் தனி நாடாகினால் தங்களுக்கு சாதகாமவிடும் என்ற பேராசையில் இந்தியா செயல்படுவது எப்படி சரியாகும். சர்வதேச அரங்குகளில் இப்படி ஒரு நாட்டு தலைவர் தன் ஆட்சி அபகரிக்கும்போது வேறு நாடுகளில் அடைக்கலம் புகுவதும் அவ்வாறு வந்தவர்களை முறையான மரியாதை வழங்கப்படுவதும் நடைமுறையில் உள்ள சம்பிரதாயங்கள்தான். இருப்பினும் அடைக்கலம் வருபவர்கள் நட்பில்லாத நாட்டிற்கு வருவதால் பகைமையையும் கூடவே கொண்டு வந்து சேர்க்கிறார்கள்.